BOARD OF TRUSTEES
Ms. Ambika Satkunanathan (Chairperson),
Ms Rohana Jayaratne, Ms. Jeanne Samuel, Mr Channa de Silva,
Ms Shehara de Silva, Mr. Mirak Raheem, Dr. (Ms.) Pramilla Senanayake

ஆடி 13ம் திகதி



**18ஆவது நீலன் திருச்செல்வம் ஞாபகார்த்த விரிவுரையை கோல்ட்ஸ்மித்ஸ் இலண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் எயல் வெயிஸ்மென் ஆற்றவுள்ளார்**

**"தடயவியல் வடிவமைப்பாக்கம்: பலஸ்தீனிலும் அதற்கு அப்பாலும் உள்ள வெற்றிடைவெளிகளும் வன்முறைகளும்" ("Forensic Architecture: Space and Violence in Palestine and Beyond")** என்னும் தலைப்பிலான, 18ஆவது நீலன் திருச்செல்வம் ஞாபகார்த்த விரிவுரை கோல்ட்ஸ்மித் இலண்டன் பல்கலைக்கழக இடஞ்சார் மற்றும் கட்புல கலாசாரங்கள் துறைசார் பேராசிரியர் எயல் வெயிஸ்மென் அவர்களினால் 2017 ஜூலை 30ஆம் திகதி பி.ப. 06.00 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (BMICH) குழு அறை A இல் (ஜெஸ்மின்) நிகழ்த்தப்படவுள்ளது. வெயிஸ்மென்னின் உரையானது, இடஞ்சார் புலனாய்வின் (**ஸ்பேசியல் இன்வெஸ்டிகேசன்**) சமகால வடிவங்களின் அரசியலையும் அழகியலையும் விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதற்கு பலஸ்தீன், பாகிஸ்தான் மற்றும் வேறுசில மோதல் இடம்பெற்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தடயவியல் வடிவமைப்பாக்கத்தின் முன்மாதிரியான பணி குறித்துப் பேசவுள்ளது.

பேராசிரியர் வெயிஸ்மென், 2005ஆம் ஆண்டு கோல்ட்ஸ்மித்ஸ் இலண்டன் பல்கலைக்கழகத்தின் கட்புல கலாசாரங்கள் பிரிவினுள், தான் நிறுவிய ஆய்வு வடிவமைப்பாக்கத்திற்கான நிலையத்தின் பணிப்பாளராகவும், 2014ஆம் ஆண்டிலிருந்து பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் உலகளாவிய கல்விமானாகவும் இருந்துவருகின்றார். அவர் பலஸ்தீனின் பைட் சஹூரைத் தளமாகக் கொண்டுள்ள வடிவமைப்பாக்கஞ்சார் கூட்டமைப்பொன்றான **குடியேற்ற விலக்க வடிவமைப்பாக்கஞ்சார் கலை இல்லம்** (Decolonizing Architecture Art Residency) என்னும் அமைப்பின் ஸ்தாபக உறுப்பினராவார். அத்துடன் வியன்னாவின் நுண்கலைகள் கல்வியகம், இலண்டனிலுள்ள பார்லெட் (UCL), பிராங்புர்ட் நகரில் அமைந்துள்ள Stadelschule ஆகியன

16/6A, Ward Place, (Mohideen Terrace), Colombo 7, Sri Lanka
Tel : 94-11-2690991-3 Fax : 94-11-2699963
Email : ntt@neelan.org
Web Site : www.neelan.org

உட்பட, பல நிறுவனங்களில் இவர் விரிவுரையாற்றியுள்ளதோடு பரிஸ் நகரில் அமைந்துள்ள, சமூக விஞ்ஞானத்தில் உயர் கற்கைகளுக்கான பாடசாலையில் (School for Advanced Studies in the Social Sciences) வருகைதரு பேராசிரியராகவும் செயற்பட்டு வருகின்றார்.

2006-2007ஆம் ஆண்டுக்குரிய ஜேம்ஸ் ஸ்டேர்லிங் ஞாபகார்த்த விரிவுரை விருதைத் தனியாகவும், 2010ஆம் ஆண்டுக்குரிய வடிவமைப்பாக்கத்திற்கான பிரின்ஸ் க்ளவ்ஸ் விருதை (Prince Claus Prize) இணைந்தும் பெற்றுள்ள பேராசிரியர் வெயிஸ்மென்; ரஸ்டி பேர்ன்ஸ்டீன், போல் ஹேர்ஸ்ட், நெல்சன் மண்டேலா, மன்சூர் ஆர்மலி மற்றும் எட்வேர்ட் செயித் உட்பட இன்னும் பலரினதும் ஞாபகார்த்த விரிவுரையை ஆற்றுவதற்கென அழைப்புவிடுக்கப்பட்டவராவார். உலகளாவிய ரீதியில் பல்வேறுபட்ட அரச சார்பற்ற அமைப்புக்களில் பணியாற்றியுள்ள இவர், B'Tselem என்னும் அமைப்பின் பணிப்பாளர் சபை உறுப்பினருமாவார். இவர் தற்போது இலண்டனிலுள்ள சமகாலக் கலைகளுக்கான நிறுவகத்தினதும், நியூயோர்க் பார்ட் கல்லூரியின் மனித உரிமைகள் செயற்றிட்டத்தினதும், அத்துடன் வேறுபல கல்வி மற்றும் கலைசார் நிறுவனங்களினதும் ஆலோசனை சபை உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார். மேலும், இவர் உலகளாவிய ரீதியில் பல நிறுவனங்களில் விரிவுரையாற்றியும், காப்பாட்சி செய்தும் (curated) அத்துடன் மாநாடுகளை ஒழுங்கமைத்தும் உள்ளவராவார்.

பேராசிரியர் வெயிஸ்மென், தடயவியல் வடிவமைப்பாக்கத் துறையில் முக்கிய குரலொன்றாகத் தன்னை வெளிப்படுத்தியிருப்பதோடு, ஹலோவ் லாண்ட்ஸ்: ஸ்ரேல்ஸ் ஆக்கிரெகசர் ஒப் ஒகிக்பெசன் (*Hollow Lands: Israel's Architecture of Occupation (2007)*) மற்றும் பொறன்சிக் ஆக்கிரெகசர்: வயலன்ஸ் அற் த திரெஸ்கோல்ட் ஒப் டிரெக்டபிளிட்டி *(Forensic Architecture: Violence at the Threshold of Detectability) (2017)* என்பன உள்ளடங்கலாக பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

ஞாபகார்த்த விரிவுரையானது, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், சமூக நீதி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துதற்கென மேற்கொள்ளப்படும் சமூக முயற்சிகளுக்கு ஆதரவளித்துவரும், உள்நாட்டு மனிதநேய அமைப்பான நீலன் திருச்செல்வம் நம்பிக்கை அறநிலையம் ஒவ்வோராண்டும் ஒழுங்குசெய்யப்படுகின்றது. வருடாந்த விரிவுரையானது கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் இறந்த திகதியான ஜூலை மாதம் 29ஆம் திகதியன்று அவரது மறைவை அனுஷ்டிக்கும் முகமாகவும், எமது காலத்தில் நிலவுகின்ற விமர்சன ரீதியான கருத்தேற்புக்களைப் பிரதிபலித்து அவை தொடர்பில் ஈடுபாடு காட்டும் பொருட்டு கல்விமான்கள், எழுத்தாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் போன்றோரை அழைத்து அன்னாரது வாழ்வையும் பணியையும் நினைவுகூரும் முகமாகவும் நிகழ்த்தப்படுகின்றது.

கல்விமான், அரசியல்வாதி, செயற்பாட்டாளர் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புபவர் என பல வகிபாகங்களைக் கொண்டிருந்த கலாநிதி திருச்செல்வம், ஆழமாகப் பிளவுற்றிருந்த சமூகமொன்றில் தனது பாண்டித்தியம், நிறுவனத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் அரசியல் என்பவற்றுக்கூடாக உறவுப் பாலங்களை கட்டியெழுப்பியதுடன் பொதுவான புலமொன்றையும் நாடிச் செயலாற்றினார். பிரத்தியேகமானதொரு மனிதநேயத் தத்துவம், சமாதானம் மற்றும் அகிம்சை என்பவற்றினால் உயிரூட்டப்பட்டவையாகவே அவரது சிந்தனைகளும் செயற்பாடுகளும் காணப்பட்டன. இலங்கைச் சமூகத்தில் ஆழ வேரூன்றியிருந்த பிரச்சினைகளை நிலைமாற்றுவதற்கும் மறுசீரமைப்பதற்கும் தீர்ப்பதற்குமென உறுதியுடன் ஈடுபட்ட அவர், உரையாடல் மற்றும் ஆழ்ந்தாராய்தல் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முயன்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு பொதுமக்கள் அன்புடன் வரவேற்கப்படுகின்றனர்.